ஏற்பட வேண்டும். எங்களுடைய அன்புத் தலைவி காலத்திலாவது அந்தக் கல்லூரியை அரசாங்கம் எடுத்து நல்லவிதமாக இயங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று எங்களுடைய அன்புத் தலைவி, புரட்சித் தலைவி அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அமைச்சர் அவர்கள் அதை சீக்கிரம் எடுக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு எடுத்துக்கொள்ள முன் வருவதற்கு முன்னால், அவர்களே முறையாக நடத்த முடியுமா என்பதை ஆராய்ந்து அதற்குப் பிறகு அரசு அதற்கான தக்க நடவடிக்கையை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு, திரு. சோ. இராசாராமன் இருக்கையில் இல்லை.

(5) 1—4—1993-ஆம் நாளன்று அவையில் நடந்த சம்பவம் குறித்து பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்றைய தினம் அவையில் திரு. பரிதி இளம்வழுதி அவர்களுக்கும், திரு. சண்முகம் அவர்களுக்கும் ஏற்பட்ட வாக்குவாதம் மற்றும் சில சம்பவங்களைத் தொடர்ந்து என்னுடைய தீர்ப்பைச் சொல்லுகிறேன் என்று அறிவித்து இருந்தேன். நேற்றைய தினம் திரு. சண்முகம் அவர்கள் மட்டும் அவையில் இருந்தார்கள். அவரைக் கூப்பிட்டு அழைத்துப் பேசியிருந்தேன். இன்றுதான் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் வந்திருக்கிறார்கள். அவரையும் அழைத்து விசாரித்து அதன் பின்னர் என்னுடைய தீர்ப்பை வழங்குகின்றேன். (குறுக்கீடு).

திரு. இளம்வழுதி : பேரவைத் தலைவர் அவர்களே, விசாரணை தேவையில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, இல்லை. நான் நேற்றே சொன்னேன். அது என்னுடைய committment. உங்களை விசாரித்துச் சொல்லுகிறேன் என்றுதான் சொல்லி இருக்கிறேன். (குறுக்கீடு) இல்லை. நேற்று அவர் இல்லாததினாலே ஒரு தரப்பை விசாரித்து என்னுடைய முடிவைச் சொல்லிவிட முடியாது என்று சொன்னேன். (குறுக்கீடு) அதாவது திரு. சண்முகம் இப்படிச் சொன்னார். எனவே, இதுதான் என்னுடைய தீர்ப்பு என்று சொல்லவில்லை. இரண்டு தரப்பையும் விசாரிக்க வேண்டும் என்று நான் சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு) அவர் இன்று வந்து இருக்கிறார். இன்று அவரை விசாரித்து அதன் பிறகு என் தீர்ப்பைச் சொல்லுவேன்.

குழுக்களின் அறிக்கைகளை அளித்தல், பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. ம. சின்னசாமி. பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர். (குறுக்கீடு).

திரு. இளம்வழுதி : பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய உயிருக்குப் பாதுகாப்பு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் தன்னுடைய உயிருக்குப் பாதுகாப்பு இல்லை என்று சொல்லுகிறார். ஆகவே, இரண்டு பேரையும்தான் விசாரிக்க வேண்டும். (குறுக்கீடு). இல்லை, நான் பார்த்தேன். உங்களுக்குள்ளே வாக்குவாதம் நடந்து கொண்டிருந்தது. அது என் காதுகளில் கேட்காத காரணத்தால் (குறுக்கீடு) இங்கே நான் அவைக்குத் தந்திருக்கிற தகவல், நான் விசாரித்து முடிவு சொல்லுகிறேன் என்று கூறியிருக்கிறேன். உங்களையும் விசாரித்து முடிவு சொல்வேன். திரு. திருநாவுக்கரசு அவர்களும் அதைத்தான் கேட்டார். (குறுக்கீடு) நான் விசாரித்துச் சொல்லுகிறேன் என்று சொன்னேன். அதை ஏற்றுக் கொண்டீர்கள். இப்போதும் நான் சொல்லுகிறேன், அவரை விசாரித்துச் சொல்லுகிறேன். இப்பொழுது இளம்வழுதி வந்திருக்கிறார். விசாரித்துச் சொல்லுகிறேன்.

குழுவின் அறிக்கைகளை அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. ம.சின்னசாமி பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர். (குறுக்கீடு) இளம்வழுதி, நான் தீர்ப்புச் சொல்லுகிறபோது நீங்கள் குறுக்கே பேசிக்கொண்டு இருக்கக்கூடாது. (குறுக்கீடு) நீங்கள் வரம்பு மீறி நடந்து கொண்டதால், அதன் பேரில் உங்கள் மீது நடவடிக்கை எடுத்தால், நீங்களும் சரி, உங்கள் கட்சித் தலைவரும் சரி, நாங்கள் ஜனாதிபதிக்கு எழுதப் போகிறோம் : பிரதமருக்கு எழுதப் போகிறோம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். நேற்றைய தினம் இங்கே நடந்தது வரம்புமீறி நடந்து கொண்டதற்குப் பிறகு உங்களை வெளியேறுமாறு உத்தரவிட்டேன். என்னுடைய உத்தரவுக்கும் அடிபணியாமல், அதன் பின் காவலர்கள் அழைத்தும் வெளியேறாமல் மறுத்தபோது, அவரோடு வாக்குவாதம் செய்ய ஆரம்பித்ததன் விளைவாக நடந்தது. வெளியே என்ன தகவல் போகிறது என்றால், தாக்கப்பட்ட சம்பவம் நடந்ததாகவும், அதன் காரணமாக நான் வெளியேற்றியதாகவும், அடித்துவிட்டு, அவரை வெளியேற்றி விட்டார்கள் என்கிற தகவல்களை உங்கள் கட்சித் தலைவர் சொல்லிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடு). உங்களை நான் வெளியேற வேண்டும் என்று உத்தரவிட்டதற்குப் பிறகு, நீங்கள் வெளியேற மறுத்ததற்குப் பிறகு, நான் காவலாளிகளை அழைத்ததற்குப் பிறகு, நடந்த சம்பவத்திற்கும், தாக்குதல் நடந்தது அதற்குப் பிறகு எங்கள் கட்சி உறுப்பினரை வெளியேற்றி விட்டார் என்று உங்கள் கட்சித் தலைவர் வெளியிலே சொல்லிக் கொண்டிருப்பதற்கும் என்ன அர்த்தம் ? அதை நீங்கள்தான் சொல்ல வேண்டும். (குறுக்கீடு) **தயவுசெய்து உட்காருங்கள். திரு. கா. ப. பட்டாபிராமன்.**

1993 ஏப்ரல் 2]

!திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றும் சரி, அதற்கு முந்தைய நாட்களிலும் சரி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் இந்த அவையினுடைய அமைதியைக் குலைக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு இங்கே வந்து சில பிரச்சினைகளை உருவாக்கி மற்றவர்கள் பேசுகின்ற போது மற்ற உறுப்பினர்கள் அதைக் கேட்க முடியாத அளவுக்கு பாதகம் பண்ணுகின்ற அளவுக்கு ஒரு சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்.

முற்பகல் 11-40

சட்டமன்றத்தினுடைய விதிமுறைகள் 87இல் (iii)-இல் ஓர் உறுப்பினர் உரையாற்றிக்கொண்டிருக்கிறபோது, ஒழுங்கற்ற சொற்களாலோ அல்லது கூச்சல் அல்லது முறையற்ற வேறுவகையிலோ அவரை இடைமறித்தல் கூடாது என்று இருக்கிறது. நீங்கள் நாளைக்கு நான் தீர்ப்பு சொல்கிறேன் என்று சொல்லி விட்ட பிறகு, மாண்புமிகு தி.மு.க. உறுப்பினர் அவர்கள் அவரை கேட்கவேண்டியது இல்லை, இப்பொழுதே நீங்கள் தீர்ப்பளியுங்கள் என்று சொன்னால், உங்களுடைய ஆணைக்கே அவர் மறுத்து, அதற்கான செயல்களிலே ஈடுபடுகிறார். அப்படித்தான் ஒரு தலைப்பட்சமாக தீர்ப்பு அளிக்க வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகத்தினர் விரும்புகிறார்களா? அதைத்தான் எதிர் பார்த்து இந்த அவைக்கே வருகின்றார்களா என்பதை அறிய விரும்புகிறேன். இப்படியே தொடர்ந்து அந்த உறுப்பினர் அவையிலே நீங்கள் பேசிக்கொண்டிருக்கும் போதும் மற்ற ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பேசிக்கொண்டிருக்கும் போதும், அமைச்சர்கள் பேசிக்கொண்டிருக்கும்போதும் குறிப்பாக முதல் அமைச்சர் எழுந்து பேசிக் கொண்டிருக்கும் போதும் இப்படி ஒருநிலைமையை இந்த அவையிலே உருவாக்கிக்கொண்டிருக்கிறார் என்றால், ஆளும் கட்சியிலே இருக்கின்ற உறுப்பினர்களும், மற்ற உறுப்பினர்களுக்கு பேசுவதற்கு உரிமை இருப்பது போல், ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கும் கேட்பதற்கு உரிமையிருக்கிறது. அதைத்தான் கௌல் அண்டு ஷக்தரிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். " If the Speaker calls a Member there must be silence and there must be opportunity for all the Members to listen and hear what the other Member speaks. என்று இருக்கிறது.

ஆகவே, ஆளும் கட்சி உறுப்பினர்கள் பேசுவதற்கு, எந்த விதத்திலும், எந்த வழி வகையிலும் இடையூறு வந்தாலும் அதைத் தடுத்து ஆளும் கட்சி உறுப்பினர்கள் பேசுவதற்கு, நீங்கள் பேரவைத் தலைவர் என்கின்ற முறையிலே வாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய வரவு செலவு பட்ஜெட் கூட்டத் தொடர் தொடங்கிய காலத்திலிருந்து தொடர்ந்து இந்த அவையில் ஒரு நாள் கூட அமளி இல்லாமல் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது அமைதியாகத்தான் இருக்கிறது. (குறுக்கீடுகள்) இப்பொழுது நல்ல அமைதியே இருக்கிறது. (குறுக்கீடுகள்) இப்பொழுது நல்ல அமைதி இருப்பதை ஏன் கெடுக்க வேண்டும்? (குறுக்கீடு) வேண்டாம் உட்காருங்கள் (குறுக்கீடு) இப்பொழுது நல்ல அமைதியாகத்தான் நடக்கிறது, உட்காருங்கள், நல்ல உறுப்பினர், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. சின்னசாமி. (குறுக்கீடு).

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சின்னசாமியை அனுமதித்திருக்கிறேன். அவர் குழுவின் அறிக்கைகளை அளிக்கிறார். இன்னொரு விதியையும் உங்களுக்குச் சொல்லி விடுகிறேன். பேரவை விதி 87 (v) " A Member present at a sitting of the House and not speaking.

(vii) shall not obstruct the proceedings or interrupt and avoid making running commenteries when speeches are being made in the House.

ஒருவர் பேசிக் கொண்டிருக்கும்போது பேசாத உறுப்பினர் தொடர்ந்து ரன்னிங் கமென்டரி மாதிரி செய்துகொண்டே இருப்பது (குறுக்கீடு) நம்முடைய இந்த விதிகளின்படி கூடாது என்று தெளிவாகச்சொல்லப்பட்டிருக்கிறது. நீங்கள் அந்த விதிகளுக்கு மாறாக....(குறுக்கீடு) நான் பேசிக் கொண்டிருக்கும் போதே, ரன்னிங் கமென்டரி கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள், ஆகவேதான் நேற்றைய தினம் நடவடிக்கை எடுத்தேன், ஆனால், நான் நடவடிக்கை எடுத்ததையே வெளியிலே போய் சொல்கிற போது, வேறு விவகாரம் உறுப்பினர்களுக்குள்ளே இங்கே நடந்ததாகவும், அதன் காரணமாக நான் உங்களை வெளியேற்றியதாகவும் சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். அது மிகவும் தவறு.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்களும், சட்டமன்ற ஆளும் கட்சி கொறடா அவர்களும் குறிப்பிட்ட அதே விதி 87 இல் செக்ஷன் vi-இல் " A Member present at a setting of the House and not speaking : shall not stand in the House when the speakeris addressing the House."

என்றும் இருக்கிறது. உறுப்பினர் பரிதி இளம்வழுதி இந்த Rule No. 87இல் குறிப்பிட்டிருக்கின்ற அத்தனை விதிகளையும் தொடர்ந்து தினமும் மீறிக்கொண்டிருக்கிறார். வரம்புமீறி நடந்து கொண்டிருக்கிறார். மற்ற சட்டமன்ற உறுப்பினர்களின் உரிமையை பாதிக்கின்ற வகையில் he is constan ly obstiuct ng the proceedings of the House. இதற்குத் தாங்கள் ஒரு முடிவு கட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இளம்வழுதி.. (குறுக்கீடு) நான் பேசிக் கொண்டிருக்கிறபோது எழுந்திருக்கக் கூடாது (குறுக்கீடு). இப்பொழுது முதல் அமைச்சர் சொன்னது தான். பேரவைத் தலைவர் பேசிக்கொண்டிருக்கும்போது ஒரு உறுப்பினர் எழுந்து நிற்கக்கூடாது என்றே இருக்கிறது. உட்காருங்கள் (குறுக்கீடு). நான் உங்களை அனுமதிக்கவில்லை. நான் அனுமதிக்காத நேரத்தில் நீங்கள் இந்த மாதிரிப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்.

முற்பகல் 11–45

இப்படிப் பேசிக்கொண்டிருப்பதால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்த அந்த விதியின்கீழும், நான் தெரிவித்த விதியின் கீழும் — தொடர்ந்து நீங்கள் பேரவை நடவடிக்கைகளுக்கு இப்படிக் குந்தகம் ஏற்படுத்த வேண்டும் என்கிற ஒரே நோக்கத்தோடு நீங்கள் இந்த அளவுக்குச் செய்துகொண்டிருக்கிற காரணத்தால் —பேரவையிலிருந்து வெளியேற உத்தரவிடுகிறேன். (குறுக்கீடு) பேரவையிலிருந்து வெளியேற உத்தரவிடுகிறேன். (குறுக்கீடு). பேரவையிலிருந்து வெளியேற உத்தரவிடுகிறேன். (குறுக்கீடு). பேரவையிலிருந்து வெளியேற உத்தரவிடுகிறேன். (குறுக்கீடு). அவரைக் காவலர்கள் வெளியேற்றவும். (குறுக்கீடு) அவரைக் காவலர்கள் வெளியேற்றவும் (குறுக்கீடு). பேரவைத் தலைவர், வெளியேற வேண்டும் என்ற உத்தரவிட்டவுடன் வெளியேறிவிடுவதுதான் சரி. (குறுக்கீடு) காவலர்களை இந்த அளவுக்குத் தாக்க முற்படுவது என்பது (குறுக்கீடு) இதெல்லாம் பத்திரிகையிலே வரவேண்டும். (குறுக்கீடு) காவலர்களுக்கு, நான் வெளியேற்ற உத்தரவிடுகிறேன். (குறுக்கீடு) நீங்கள் வெளியே போக வேண்டும். (குறுக்கீடு) காவலர்களை ஏன் தடுக்கிறீர்கள்? (திரு. இளம்வழுதி பேரவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டார்).

பத்திரிகையாளர்கள் இதையும் பார்க்க வேண்டும். இத்தகைய காரியத்தைப் பற்றிதந்திகொடுத்ததலைவருக்கும், யாருக்குத் தந்தி கொடுத்திருக்கிறார்களோ அவர்களுக்கும் இந்தச் செய்தி செல்ல வேண்டும். நான் வெளியேறவேண்டும் என்று உத்தரவிட்டதற்குப் பிறகு வெளியேற மறுத்து தொடர்ந்து பேசிக்கொண்டிருப்பதும், காவலர்கள் சென்று அவரை, வாருங்கள் என்று

அழைத்தவுடன் வெளியேற வேண்டிய உறுப்பினர் அந்தக் காவலர் களோடு இந்த அளவுக்கு முரண்டு செய்வதும் தொடர்ந்து நடைபெறுகிற நிகழ்ச்சிகள். நேற்றைய தினமும் இதுதான் நடைபெற்றது. திரு. இளம்வழுதி ஏற்கெனவே இந்தக் கூட்டத் தொடரில் இதையும் சேர்த்து இரண்டு முறை வெளியேற்றப் பட்டிருக்கிற காரணத்தால் இந்தக் கூட்டத் தொடர் முழுவதும் அவர் பேரவையின் நடவடிக்கைகளிலிருந்து தள்ளிவைக்கப்படு கிறார்.

3. எஞ்சிய கூட்ட நாட்களுக்குப் பேரவைப் பணிகளினின்று சில உறுப்பினர்கள் தள்ளிவைக்கப்பட்டிருப்பதை மறுபரிசீலனை செய்யவேண்டுமென்ற கோரிக்கை—தொடர்ச்சி.

திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். திருநாவுக்கரசு.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள் 3 காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள். அப்போது கூட நாங்கள் ஒரு வேண்டுகோள் விடுத்தோம். இப்போதும் இந்தச் சட்ட மன்றக் கூட்டத் தொடர் பூராவுக்கும் நீக்கி வைப்பது என்பது வருகிறது. இந்த மாதிரி எதிர்க்கட்சிகளை மொத்தமாக சபை பூராவுக்கும் நீக்கி வைப்பது, கூட்டத் தொடர் முழுவதற்கும் நீக்குவது என்பது தவறான நடவடிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயின்ட் ஆஃப் ஆர்டர் அல்ல. என்னுடைய தீர்ப்பின் மீதே பேசிக்கொண்டிருப்பது பாயின்ட் ஆஃப் ஆர்டர் அல்ல. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) It is against Rules. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த விதியைச் சுட்டிக்காட்டினார்கள். நானும் சுட்டிக் காட்டினேன். (குறுக்கீடுகள்) அது விதி 120. (குறுக்கீடுகள்) நான் விதிக்குப் புறம்பாக நடந்தால் தான் நீங்கள் சொல்லலாம். நான் விதிக்கு எந்தவகையிலேயும் புறம்பாக நடக்கவில்லையே. (குறுக்கீடு) விதி 120-ன் கீழ், ஒரு உறுப்பினர் வரம்பு மீறி நடந்து கொண்ட தன்மைகளில் ஒன்றுக்கு இரண்டு முறை பேரவைத் தலைவரால் வெளியேற்றப்பட்டால் எஞ்சிய கூட்டத்தொடர் முழுமைக்கும் வெளியேற்றப்படலாம் என்றிருக்கிறது. (குறுக்கீடுகள்) ஒவ்வொரு நாளாக இப்படி திட்டமிட்டுச் செய்தால் (குறுக்கீடு) இப்போது என்ன நடந்தது ? எவ்வளவோ சொன்னோம். கடைசியாக உட்காருங்கள் என்றும் சொன்னேன் (குறுக்கீடுகள்) நான்பேசிக்கொண்டிருக்கிறபோதுஇப்போதுநீங்கள்